கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தரம்

தரம் 12, 13

# இஸ்லாமிய நாகரிகம்

## பாடத்திட்டம்

(2009 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும்)

சமயக் கல்வித்துறை
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

# 1.0 அறிமுகம்

நல்லொழுக்கமும் பண்பாடும் மிக்க சமூகமொன்றை உருவாக்குவதில் கல்வி பிரதான இடத்தை வகிக்கின்றது. இந்தப் பணிக்கு சமயங்களும், நாகரிகங்களும் நிறைந்த பங்களிப்பை வழங்கி வருகின்றன. அதனால் சமயம், நாகரிகம் என்பவற்றுக்கு மனித உள்ளத்தில் நிலையான பதிவு உண்டு.

ஒரு சமூகம் ஒரு நாகரிகத்தைப் பற்றி நிற்பதற்கு அதன் கோட்பாடுகளும், நடைமுறைச் சாத்தியங்களுமே காரணங்களாக அமைகின்றன. கோட்பாடுகளும், நடைமுறைகளும் கொண்டிருந்த அடிப்படைகளே நாகரிகத்தைக் கட்டியெழுப்புவதற்குக் காலாக அமைகின்றன. ஒரு நாகரிகத்தின் அடிப்படை சரியாகப் பின்பற்றப்படும் காலமெல்லாம் அந்நாகரிகம் சிறப்புற்றிருப்பதையும், அடிப்படைகள் புறக்கணிக்கப்படுகின்ற காலகட்டத்தில் அது தளார்வுற்றிருப்பதையும் வரலாறு சுட்டிக் காட்டுகின்றது. ஆகவே, நாகரிகத்தின் அடிப்படைகள் எப்போதும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இஸ்லாமிய நாகரிகம் சமூக வளர்ச்சிக் கட்டத்தில் தோன்றிய ஒரு நாகரிகமன்று. அது காலத்தின் தேவையறிந்து இறைவழிகாட்டலில் உருவாக்கப்பட்ட ஒரு நாகரிகமாகும். எனவேதான், அதன் அடிப்படைகளும் மூலாதாரங்களும் இறைவழிகாட்டலிலிருந்து கிடைக்கப் பெற்றுள்ளன. இஸ்லாமிய நாகரிகத்தைக் கற்பதன் நோக்கம் அதன் அழகைச் சுவைப்பது மட்டுமன்றி அதன் உயர் அம்சங்களை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்திக் காட்டுவதுமாகும். வரலாற்றில் அது எழுச்சி பெற்றதற்கான காரணங்களைக் கண்டறிந்து, தளர்வடைந்திருக்கும் இக்கால கட்டத்தில் அதனை மீளெழுச்சி பெறச் செய்வதற்கான முயற்சிகளைக் கண்டறிவதும், அவற்றை நடைமுறைப்படுத்துவதும் இப்பாடத்தைக் கற்பதன் முதன்மையான நோக்கங்களாகும்.

பொதுவாக மனித சமுதாயமும், குறிப்பாக கட்டிளமைப் பருவத்தினரும் பண்பாட்டுத்துறையில் வீழ்ச்சியடைந்துவரும் இக்கால கட்டத்தில், அவர்களை வழிநடாத்தும் பெரும் பொறுப்பை சமய, நாகரிகப் பாடங்கள் ஏற்றிருக்கின்றன. அவை கலைத்துறை பாடங்களாக வரையறுக்கப்பட்டிருந்தாலும், ஏனைய துறை மாணவர்களும் கற்க வேண்டிய பாடங்களாக கொள்ளப்பட வேண்டியனவாகும்.

ஒழுக்கச் சீர்கேடுகளும் சிந்தனைச் சிக்கல்களும் பிரவாகமெடுத்துவரும் இக்கால சூழலில் இஸ்லாமிய நாகரிகத்தைக் கற்பது மாணவரின் பண்பாட்டுத் தகைமை விருத்திக்கு மிக அவசியமானதாகும். அதனை பரீட்சைக்கான பாடமாக மட்டுமன்றி, இம்மை மறுமைக்கான வழிகாட்டலாகவும் கற்பிக்கப்பட வேண்டிய பாரிய பொறுப்போடு ஆசிரியர்கள் அமர்ந்துள்ளனர். எந்த சமூகம் தனது வரலாற்றையும், நாகரிகத்தையும் தெரிந்து கொள்ளவில்லையோ அந்தச் சமூகம் ஏனைய நாகரிகங்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் தனது தனித்துவத்தை இழந்துவிடும் என்பதே வரலாறாகும். அந்த நிலையைத் தவிர்க்கும் ஒரு முயற்சியாக இந்தப் பாடத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. தேர்ச்சி மையப் பாடத்திட்டம் என்பதால் ஒவ்வோர் அலகிலும் எதிர்பார்க்கின்ற தேர்ச்சி மட்டங்களை அடைய வைப்பதில் ஆசிரியர்கள் மிகுந்த கரிசனை காட்ட வேண்டும். அவர்களின் அர்ப்பண சிந்தையுடனான முயற்சிகளே இப்பாடத்திட்டத்தை வெற்றியடையச் செய்யும் என நம்புகிறோம்.

## 2.0 பாடத்திட்டத்தின் நோக்கம்

- இஸ்லாமிய நாகரிகம் என்றால் என்ன என்பதை விளங்கல்
- இஸ்லாமிய நாகரிகத்தின் வரலாற்றுப் பின்னணியையும் அதன் சிறப்பம்சங்களையும் இனங்காணல்
- இஸ்லாமிய நாகரிகத்தை உருவாக்குவதிலும், அதன் வளர்ச்சியிலும் இஸ்லாத்தின் மூலாதாரங்கள் வகிக்கும் பங்கினை விளக்குதல்
- முஸ்லிம் சமூக கல்வி கலாசார வளர்ச்சியையும், விருத்தியையும் விளங்கிக் கொள்ளல்
- ஆன்மீக ஈடுபாட்டின் முக்கியத்துவத்தையும் முறையினையும் அறிந்து செயற்படுத்தல்
- இஸ்லாமிய நாகரிகத்தின் அறிவியல் பங்களிப்புக்களை இனங்கண்டு விருத்தி செய்தல்
- இஸ்லாமிய நாகரிகத்தின் அழகியல் பங்களிப்புகளை விளங்கி நயத்தல்
- கிலாபத்தின் தோற்றம், வளர்ச்சி, தேக்கநிலை பற்றிக் கற்று அதற்காக பங்களிப்புச் செய்தல்
- இஸ்லாமிய நாகரிகத்தின் பரம்பல் பற்றி அறிந்து விமர்சித்தல்
- இலங்கையில் இஸ்லாமிய நாகரிகத்தின் செல்வாக்கை விளங்கி பங்காற்றல்

## பாடசாலை தவணைக்கேற்ப பாடத்திட்டத்தை வகுத்தக் கொள்வதற்கான உத்தேச திட்டம்

| தரம் | தவணை | தேர்ச்சி மட்டங்கள் | பாடவேளைகள் |
|---|---|---|---|
| தரம் 12 | I | 1.1, 1.2, 1.3, 1.4, 2.1, 2.2 | 100 |
| | II | 3.1, 3.2, 3.3, 3.4, 4.1, 4.2 | 100 |
| | III | 5.1, 5.2, 5.3, 6.1, 6.2 | 100 |
| தரம் 13 | I | 7.1, 7.2, 8.1, 8.2 | 100 |
| | II | 8.3, 8.4, 9.1, 9.2 | 100 |
| | III | 9.3, 9.4, 10.1, 10.2 | 100 |

## 3.0 பாடத்திட்டம் 3.1 தரம் 12

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| **1.0 இஸ்லாமிய நாகரிகத்தின் சிறப்புகளையும் அதன் அடிப்படை மூலாதாரங்களையும் அறிந்து அதன்படி செயற்படுவார்** | 1.1 சமயம், கலாசாரம், நாகரிகம் என்பவற்றின் கருத்து ரீதியான விளக்கங்களை அறிந்து கூறுவார் | • சமயம், கலாசாரம், நாகரிகம் - மொழி ரீதியான விளக்கம்<br>• சமயம், கலாசாரம், நாகரிகம் - பிரயோக ரீதியான விளக்கம் | 15 |
| | 1.2 இஸ்லாமிய நாகரிகத்தின் சிறப்பம்சங்களை இனங்காண்பார் | • இஸ்லாமிய நாகரிகத்தின் சிறப்பம்சங்கள்<br>• பிற கலாசார தாக்க விளைவுகள் பற்றிய வரலாற்றுக் கண்ணோட்டம் | 15 |
| | 1.3 இஸ்லாமிய நாகரிகத்தின் அடிப்படை மூலாதாரம் என்ற வகையில் குர்ஆனின் முக்கியத்துவத்தை இனங்காண்பார் | • இஸ்லாமிய நாகரிகத்தின் அடிப்படை மூலாதாரம் என்றவகையில் அல்குர்ஆன்<br>• அல்குர்ஆன் அருளப்படலும் தொகுக்கப்படலும்<br>• சமுதாய உருவாக்கத்தில் அல்குர்ஆனின் பங்கு<br>  • தனிமனிதன்<br>  • குடும்ப வாழ்வு<br>  • சமூக வாழ்வு | 15 |
| | 1.4 இஸ்லாமிய நாகரிகத்தின் மூலாதாரம் என்ற அடிப்படையில் சுன்னாவின் முக்கியத்துவத்தை இனங்கண்டு கூறுவார் | • சுன்னாவின் முக்கியத்துவம்<br>• இஸ்லாமிய நாகரிகத்திற்கு சுன்னாவின் பங்கு | 15 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| **2.0 கால வளர்ச்சிக் கேற்ப இஸ்லாத் தின் மூலாதாரங்க ளைச் செயற்படுத்த துணை புரியும் சாதனம் என்ற வகையில் இஜ்தி ஹாதின் முக்கியத் துவத்தை விளங்கி நடைமுறைப் படுத்துவார்.** | 2.1 இஜ்திஹாதின் முக்கியத்துவத்தை விளங்கி ஏற்றுக் கொள்வார் | • இஜ்திஹாத் பற்றிய விளக்கம்<br>• இஸ்லாமிய சட்டவாக்கத்தில் இஜ்திஹாத்<br>• இஜ்திஹாதின் பயன்பாடு | 20 |
| | 2.2 இஜ்திஹாதின் வடிவங்களை இனங்கண்டு விளங்கிக் கொள்வார் | • இஜ்திஹாதின் வடிவங்கள்<br>  • இஜ்மா<br>  • கியாஸ்<br>• நவீன காலத்தில் இஜ்திஹாதின் தேவை | 20 |
| **3.0 இஸ்லாமிய நாகரி கத்தின் கோட்பாடு கள் பற்றி தெளிவாக விளங்கி, சமுதாய உருவாக்கத்தில் அதன் கொள்கை களையும், நடை முறைகளையும் அறிந்து செயற்படுத்துவார்** | 3.1 இஸ்லாமிய நாகரிகத்தின் நம்பிக்கைக் கோட்பாடுகள் பற்றி அறிந்து ஒழுகுவார் | • தவ்ஹீத்<br>• ரிஸாலத்<br>• மஆத் | 15 |
| | 3.2 இஸ்லாமிய நாகரிகத்தின் உலக நோக்கு பற்றி விளங்கிச் செயற்படுவார் | • பிரபஞ்சம்<br>• மனிதன்<br>• வாழ்வு | 15 |
| | 3.3 நபி (ஸல்) அவர்கள் உருவாக்கிய சமுதாயத்தின் மாண்புகள், முன்மாதிரிகள், நடைமுறைகளைத் தமது வாழ்க்கையில் முன்மாதிரி யாகக் கொள்வார். | • இஸ்லாமிய நாகரித்தில் சமுதாய உருவாக்கம்<br>  • நபி (ஸல்) அவர்கள் உருவாக்கிய சமுதாயம்<br>  • சமூக மாண்புகள்<br>  • பல்லின சமூகத்துடனான உறவுகள்<br>• கல்வியும் பண்பாடும் | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| | 3.4 மனித உள்ளத்தை தூய்மைப்படுத்தலை அடிப்படையாகக் கொண்ட ஆன்மீக செயற்பாடுகளை விளங்கி தமது வாழ்க்கையில் நடைமுறைப் படுத்துவார் | • தஸ்கியாவின் முக்கியத்துவம்<br>• தஸவ்வுப் - தோற்றம், வளர்ச்சி, தரீக்காக்கள், சமூகத் தாக்கம் | 20 |
| **4.0 இஸ்லாமிய வரலாற்றில் தோன்றிய அரசியல் ரீதியான, சிந்தனா ரீதியான இயக்கங்கள் பற்றி விளங்கிக் கொள்வார்** | 4.1 இஸ்லாமிய வரலாற்றில் தோன்றிய அரசியல் இயக்கங்களின் தோற்றங்களுக்கான பின்னணியையும் பிரதான கோட்பாடுகளையும் இனங்காண்பார் | • ஷீஆக்கள்<br>• கவாரிஜ்கள் | 15 |
| | 4.2 இஸ்லாமிய வரலாற்றில் தோன்றிய சிந்தனா ரீதியான இயக்கங்களின் தோற்றங்களுக்கான பின்னணியையும் பிரதான கோட்பாடுகளையும் இனங்காண்பார் | • அஷ்அரிய்யா<br>• மு∴தஸிலா | 15 |
| **5.0 இஸ்லாமிய வரலாற்றில் தோன்றிய கலைகளையும், நாகரிகத்தில் அவற்றின் தாக்கங்களையும் கிரகித்து ஊக்கப்படுவர்.** | 5.1 இஸ்லாமிய மூலாதாரங்களை விளங்கிக் கொள்வதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் தோன்றிய கலைகளை அறிந்து விபரிப்பார் | • தப்ஸீர் கலை<br>• ஹதீஸ் கலை<br>• பிக்ஹு கலை<br>  • இவற்றின் தோற்றம், வளர்ச்சி, தொகுப்புகள் | 25 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| | 5.2 இஸ்லாமிய வரலாற்றில் தோன்றி வளர்ந்த அறிவியல் கலைகள் மற்றும் கலைகள் பற்றி அறிந்து ஊக்கம் பெற்று தம்மை வளர்த்துக் கொள்வார் | • புவியியல்<br>• வானவியல்<br>• மருத்துவம்<br>• கணிதம்<br>• வரலாறு | 20 |
| | 5.3 இஸ்லாமிய வரலாற்றில் தோன்றி வளர்ந்த அழகியல் கலைகளை அறிந்து சுவைத்து இன்புறுவார் | • எழுத்தணிக்கலை<br>• அறபெஸ்க்<br>• இசைக்கலை<br>• கட்டடக்கலை | 15 |
| **6.0 வரலாற்றில் இஸ்லாமிய நாகரிகம் நலிவுற்ற நிலையையும் அதனை மீளெழுச்சி பெறச் செய்ய மேற்கொள்ளப்பட்ட தனியான, கூட்டு முயற்சிகளையும் இனங்கண்டு பங்களிப்புச் செய்வார்** | 6.1 இஸ்லாமிய நாகரிகம் நலிவடைந்தமைக்கான காரணங்களை இனங் கண்டு விளக்குவார் | • இஸ்லாமிய நாகரிகத்தின் தேக்க நிலை<br>• இஸ்லாமிய நாகரிகம் நலிவடைந்தமைக்கான காரணங்கள் | 20 |
| | 6.2 இஸ்லாமிய நாகரிகத்தின் தேக்க நிலையைப் போக்க மேற்கொள்ளப் பட்ட நடவடிக்கைகளை விபரிப்பார். | • புனரமைப்புக்கான நடவடிக்கைகள்<br>  • தனிநபர்கள்<br>  • இஸ்லாமிய இயக்கங்கள் | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| **7.0 இஸ்லாத்திற்கு முந்திய காலகட்டத்தில் நிலவிய சமூக, கலாசார, அரசியல் நிலைகளை இனங் காண்பதனூடாக ஜாஹிலிய்யத்தை தவிர்ந்து நடப்பார்** | 7.1 நபி (ஸல்) அவர்கள் நுபுவ்வத் பெறுவதற்கு முன்புள்ள அரபு நாட்டின் சமய, சமூக, பொருளாதார, அரசியல் நிலைகளை வரலாற்று ரீதியாக கண்டாய்வார் | • அரேபியாவின் புவியியல், வரலாறு<br>• சமூக, பொருளாதார நிலை<br>• அரபுமொழியும் இலக்கியமும்<br>• சமயமும் ஒழுக்கமும் | 30 |
| | 7.2 நுபுவ்வத் பெறுவதற்கு முன் நபி (ஸல்) அவர்களின் செம்மையான வாழ்க்கை நெறிமுறையை விபரிப்பார். | • நபி (ஸல்) அவர்களின் பிறப்பு முதல் நுபுவ்வத் வரையான வாழ்க்கை வரலாறு | 20 |
| **8.0 நபி முஹம்மத் (ஸல்) அவர்களது வருகையின் நோக் கத்தையும், அவர்க ளது பல்துறை சார்ந்த நடவடிக் கைகளையும் விளங்கி அவர் களைத் தொடர்ந்து வந்த குலபாஉர் ராஷிதீன்களின் காலத்தில் நிலவிய சமூக, அரசியல் செயற்பாடுகள் பற்றியும் அறிந்து அவற்றை முன்மாதி ரியாகக்கொள்வார்.** | 8.1 நபியவர்களுக்கு நுபுவ்வத் கிடைத்த பின்னணியையும் அதன் பின்னர் அவர்கள் எதிர்நோக்கிய சவால் களையும் இனங்காண்பார் | • நபி (ஸல்) அவர்களது அழைப்புப் பணியும், எதிர்நோக்கிய சவால்களும்<br>• அகபா உடன்படிக்கையும் ஹிஜ்ரத்தும் | 25 |
| | 8.2 நபியவர்களின் மதீனா வாழ்க்கைப் பகுதியில் அவர்களால் மேற்கொள் ளப்பட்ட நடவடிக்கைகளின் நுட்பங் களையும் வெற்றிகளையும் விபரிப்பார். | • மஸ்ஜிதுன் நபவி<br>• உடன்படிக்கைகள்<br>• போராட்டங்கள்<br>• மக்கா வெற்றி<br>• மதீனா அரசும் பரிபாலன முறைகளும் | 30 |

## 3.2 தரம் 13

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| | 8.3 இஸ்லாமிய கிலாபத் கோட்பாட்டை நடைமுறைப்படுத்திய பாங்கை வரலாற்றுக் கண்ணோட்டத்தில் கண்டறிவார் | • கலீபாக்களின் ஆளுமைப் பண்புகள்<br>• சமய, சமூகப் பணிகள் | 20 |
| | 8.4 கிலாபத்தின் விரிவையும், பரிபாலன முறையையும் கால கட்டங்களாக வகுத்து மதிப்பீடு செய்வார் | • ஆட்சி விஸ்தரிப்பு<br>• உள்நாட்டுப் பிரச்சினைகளும், விளைவுகளும்<br>• பரிபாலன முறை | 25 |
| **9.0 உமையா, அப்பாஸிய ஆட்சிக் காலங்களிலும் அதன் பின்னரும் நிலவிய அரசியல், சமூக, கல்வி, கலாசார முன்னேற்றங்களை விமர்சன ரீதியாக விளக்கி நயப்பார்** | 9.1 உமைய ஆட்சியின் தோற்றம், வளர்ச்சி, சாதனைகள் பற்றி விமர்சனக் கண்ணோட்டத்தில் ஆராய்வார் | • உமையா ஆட்சியின் தோற்றமும், வளர்ச்சியும்<br>• கலீபா முஆவியா (ரழி), அப்துல் மலிக், வலீத் ஆகிய ஆட்சியாளர்களின் பங்களிப்புக்கள்<br>• கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்களது ஆட்சிக் காலம்<br>• உமையாக்கள் கால கல்வி கலாசார முன்னேற்றங்கள்<br>• உமையாக்களின் வீழ்ச்சி | 25 |
| | 9.2 அப்பாஸிய ஆட்சியின் தோற்றம், வளர்ச்சி, சாதனைகள் பற்றி பகுப்பாய்வு செய்வார் | • அப்பாஸிய ஆட்சியின் தோற்றமும், வளர்ச்சியும்<br>• கலீபா மன்சூர், ஹாறூன், மஃமூன் ஆகியோரின் பங்களிப்புக்கள்<br>• முக்கிய சிற்றரசுகள்<br>• அப்பாஸியர் கால கல்வி, கலாசார முன்னேற்றங்கள்<br>• அப்பாஸிய கிலாபத்தின் வீழ்ச்சி | 25 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| | 9.3 ஐரோப்பாவில் இஸ்லாம் அறிமுகமாகி வளர்ந்து பங்களிப்புச் செய்த முறையினை விளங்குவார். | • ஸ்பானியாவில் முஸ்லிம் ஆட்சி<br>• துருக்கியில் உஸ்மானியர் ஆட்சி | 25 |
| | 9.4 இந்தியாவில் இஸ்லாம் அறிமுகமாகி தனியான ஆட்சி முறையொன்றை தாபித்து நடத்திய முறைகளை நயப்பார். | • இந்தியாவில் மொகலாய ஆட்சி | 25 |
| **10.0 இலங்கைக்கு இஸ்லாம் அறிமுகமான பின்னணியை விளங்கி நாட்டின் கலாசாரத்தில் முஸ்லிம்கள் ஏற்படுத்திய தாக்கங்களை இனங்கண்டு முஸ்லிம்களின் பங்களிப்புக்களை விளக்குவார்.** | 10.1 இலங்கையில் இஸ்லாம் அறிமுகமான பின்னணியினை அறிந்து கூறுவார் | • இலங்கைக்கு இஸ்லாம் அறிமுகமாதல்<br>• முஸ்லிம்களின் வரலாறும் கலாசாரமும்<br>• தென்னிந்திய - இலங்கை முஸ்லிம்களின் உறவு | 20 |
| | 10.2 இலங்கை முஸ்லிம்களின் தேசிய பங்களிப்புக்களை இனங்கண்டு விளக்குவார். | • தேசிய, கலாசார பங்களிப்பு<br>• முஸ்லிம் தனியார் சட்டம்<br>• இலங்கை முஸ்லிம்களின் மறுமலர்ச்சிக்கான முன்னோடிகள்<br>  • எம்.ஸீ. சித்திலெப்பை<br>  • மாப்பிள்ளை லெப்பை ஆலிம்<br>  • ஏ.எம்.ஏ அஸீஸ்<br>  • ரீ.பீ. ஜாயா | 30 |

## 4.0 கற்றல் கற்பித்தல் முறை

மாணவரின் அறிவு, திறன், மனப்பாங்குகளுக்கூடாக நடத்தையில் ஏற்படுகின்ற தெளிவானதும், நிலையானதுமான மாற்றத்தை இலக்காகக் கொண்டு தேர்ச்சிகள் வகுக்கப்பட்டுள்ளமையால், இஸ்லாமிய நாகரீக பாடத்தை வெறும் அறிவு விருத்திக்கான நிலையில் மட்டுமன்றி மனப்பாங்கு விருத்தி, நடத்தை மாற்றம் என்பவற்றையும் ஏற்படுத்துகின்ற வழியில் நடத்துவதற்கு, தேர்ச்சிமைய கற்றல் கற்பித்தல் முறை சிறப்பாக அமையும். தேர்ச்சி மைய கல்வியில் ஆசிரியரின் வகிபாகம் மாற்றமடைவதாலும் மாணவரின் ஈடுபாடு அதிகமாக அமைவதாலும் உயர்வகுப்பில் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தலாம். ஆதலால் மாணவரின் திறமைகளை இனங்கண்டு கற்றலுக்குத் தேவையான துணைகளுக்கூடாக மாணவர்களின் அடைவுமட்டத்தை எய்துவதற்கு ஆசிரியர்கள் வழிகாட்டுதல் வேண்டும்.

மாணவரைக் கவர்வது, ஆர்வத்தோடு எதிர்பார்ப்பது போன்ற தன்மைகளை உருவாக்குவதற்கு பொருத்தமான உத்திகளைக் கையாள்வது ஆசிரியரின் பணியாகும். விருத்தி செய்துகொள்ள வேண்டிய அடிப்படைத் தேர்ச்சிகளுடன் தொடர்புடைய முன்னறிவு நினைவுகூரப்பட வேண்டும்.
கற்றல் கற்பித்தல் செயற்பாட்டினை விரிவாக்கும் போது அவை பின்வரும் வகைகளில் அமைய முடியும்.

- வினா - விடைப் புத்தகம்
- குழுக்கலந்துரையாடல்
- விவாதம்
- கருத்தரங்கு
- களவேலைப் புத்தகம்
- தினக்குறிப்பு
- கருத்துக்களை/ விமர்சனங்களை முன்வைத்தல்.

# 5.0 பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்

எமது நாட்டுக் கலைத்திட்டம் பரீட்சையை இலக்காகக் கொண்ட ஏட்டுக் கல்விக்கு முதலிடம் வழங்கி நடைமுறைப்படுத்தப்படுகின்றமையால் திறன்களும், மனப்பாங்குகளும், நற்பழக்கங்களும் அரிதாகவே உருவாகும் நிலை காணப்படுகின்றது. இந்நிலையை நிவர்த்தி செய்வதற்குப் பொருத்தமான பின்னணி பாடசாலைகளில் உருவாகத்தக்க வகையில் பாடசாலைத் தொகுதியும் பாடசாலைக் கொள்கையும் இசைவுபடுத்தப்படல் வேண்டும்.

இஸ்லாமிய நாகரிகம் பாடத்திட்டத்தினூடாக மாணவரின் திறன்களையும், மனப்பாங்குகளையும் நற்பழக்கங்களையும் விருத்தி செய்துகொள்வதற்கு உதவுவதற்காக பாடசாலை மட்டத்தில் ஒழுங்கு செய்யப்படும் பல்வேறு பாடசாலைச் செயற்பாடுகளைத் துணையாகக் கொள்ளல் சிறந்ததாகும். இப்புதிய கலைத்திட்டத்தைப் பாடசாலையில் அமுல்படுத்துவதற்காக பின்வரும் வழிவகைகளை மேற்கொள்ளலாம்.

1. சமய, கலாசார விழுமியங்களை மேம்படுத்த விரும்பும் அமைப்புக்களை பாடசாலையில் நடாத்தச் செய்தல்.
2. மத்ரஸாக்கள், ஜாமிஆக்கள், பயிற்சி முகாம்கள் போன்றவற்றைப் பார்வையிடுவதற்காக கல்விச் சுற்றுலாக்களை ஒழுங்குபடுத்தி மாணவரைப் பங்குபற்றச் செய்தல்.
3. பாடசாலைக்குத் தேவையான இஸ்லாமிய நடைமுறைகளை மாணவர் தாமாக திட்டமிட்டு அமைப்பதற்கான வேலைத்திட்டமொன்றை உருவாக்கி நடைமுறைப்படுத்தல்.
4. புத்தாக்கச் செயற்றிட்டங்களை உள்ளடக்கிய போட்டிகள், நிகழ்ச்சித் திட்டங்கள் போன்றவற்றை நடாத்தல்.
5. இனங்காணப்பட்ட புத்தாக்கம் படைத்த மாணவர்களையும் அவர்களுக்கு வளப்பங்களிப்புச் செய்தோரையும் அழைத்து செயலமர்வுகளை ஒழுங்கு செய்தலும், அவர்களின் சேவைகளைப் பாடசாலைக்குப் பெற்றுக் கொள்ளலும்.

மேற்படி பணிகளை வெற்றிகரமானவையாக்கிக் கொள்வதற்காக அதிபர் உட்பட ஆசிரியர் குழாத்தினதும் மாணவ மாணவியரதும் ஆர்வமிக்க பங்களிப்பு இன்றியமையாததாகும். இப்பாடத்தைப் பாடசாலையில் நடைமுறைப்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் ஆசிரியர்களுக்குத் தேவையான வசதிகளையும் ஒத்துழைப்பையும் வழங்க அதிபர் தயங்கலாகாது. மேற்படி செயற்பாடுகளை ஒழுங்கு செய்வதற்காக மரபுரீதியான பாடசாலைக் கொள்கையிலிருந்து சற்று விலகி பாடசாலைக்கெனச் சிறப்பான ஒரு கொள்கைக் கோவையை வகுத்துக் கொள்ளல் வேண்டும். அவ்வாறான ஒரு கொள்கைக் கோவையை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்காக, பாடசாலையுடன் தொடர்புடைய சமுதாயத்தினரின் ஈடுபாட்டையும் வளவாளர்கள் மற்றும் நிறுவனங்களின் அறிவையும் ஆலோசனைகளையும் பெற்றுப் பயனடையலாம்.

## 6.0 கணிப்பீடும் மதிப்பீடும்

பாடசாலை மட்டக் கணிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு தவணைக்குமென நிர்ணயிக்கப்பட்ட தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்கள் என்பன உள்ளடங்கும் வகையில் கணிப்பீட்டுக்கருவிகளைத் தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்பாடத்திட்டமானது தரம் 13 இன் இறுதியில் இடம்பெறுகின்ற தேசிய மட்டக் கணிப்பீடான கா.பொ.த. உயர்தர பரீட்சைக்குரியதாகவே தயாரிக்கப்பட்டுள்ளது.

இதனை அடிப்படையாகக் கொண்டு, இலங்கைப் பரீட்சைத்திணைக்களத்தின் மூலம் தேசிய மட்டத்தில் முதலாவது பரீட்சை 2011 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்குரிய வினாப்பத்திரத்தின் அமைப்பு, மாதிரி பற்றிய தெளிவான விபரங்கள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் வழங்கப்படும்.